வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,
ந.க.எண். 1238/அ4/2023 நாள் : .03 .2023

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக் கல்வி – மேல்நிலைக் கல்விப்பணி – அரசு மற்றும் நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் 01.01.2023 நிலவரப்படி பணி மாறுதல் / பதவி உயர்வு மூலம் தமிழ், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல், வரலாறு, பொருளியல், வணிகவியல், புவியியல், உடற்கல்வி இயக்குநர் நிலை – 1 பாட முதுகலை ஆசிரியர் நியமனம் செய்ய பட்டதாரி ஆசிரியர்கள் ஆசிரியர் பயிற்றுநர்கள் மற்றும் பள்ளித் துணை ஆய்வாளர்கள் விவரங்கள் கோருதல் – சார்ந்து |
| பார்வை | 1.தமிழ்நாடு மேல்நிலைக் கல்விப்பணி சிறப்பு விதிகள் அரசாணை நிலை எண்.14 பள்ளிக் கல்வித் (எஸ்.இ.2(1) துறை நாள்.30.01.2020 (அரசிதழ் எண்.36 நாள்.30.01.2020)<br>2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் ( மேல்நிலைக் கல்வி ) அவங்களின் செயல்முறைகள் கடித ந.க.எண்.13006/டபிள்யு2/இ1/2023 நாள்.14.03.2023 |

------

பார்வையில் காணும் செயல்முறைகளுக்கிணங்க, அரசு மற்றும் நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் 01.01.2023 நிலவரப்படி பணி மாறுதல் / பதவி உயர்வு மூலம் தமிழ், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல், வரலாறு, பொருளியல், வணிகவியல், புவியியல், உடற்கல்வி இயக்குநர் நிலை – 1 பாட முதுகலை ஆசிரியர் நியமனம் செய்ய பட்டதாரி ஆசிரியர்கள், ஆசிரியர் பயிற்றுநர்கள் மற்றும் பள்ளித் துணை ஆய்வாளர்கள் பார்வைகளில் காணும் செயல்முறைகளில் தெரிவித்துள் வழிகாட்டுதலை பின்பற்றி கருத்துரு (Annexure–1) தயார் செய்து மூன்று நகல்களில் அனுப்பி வைக்குமாறு அனைத்து அரசு / நகரட்சி மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தங்கள் பள்ளியில் பணிபுரியும் அனைத்து ஆசிரியர்களின் பணிப்பதிவேட்டினை ஆய்வு செய்து பார்வையில் காண் செயல்முறைகளில் தெரிவித்துள்ள வழிகாட்டுதல்களை பின்பற்றி எவர் பெயரும் விடுபடாமல் தயார் செய்து அனுப்புமாறும் தகுதி உள்ள எவரின் பெயரும் விடுபட்டதாக தெரிவித்து எந்த ஆசிரியரிடமிருந்து முறையீடு ஏதும் பெறப்படின் அதற்கு சம்பந்தப்பட்ட பள்ளி ஆசிரியரிடமிருந்து முழு பொறுப்பு ஏற்க நேரிடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த செயல்முறைகளை அனைத்து ஆசிரியர்களுக்கும் சுற்றுக்கு விட்டு அவர்களின் ஒப்பத்தினைப் பெற்று கோப்பினை பராமரிக்க வேண்டும்.

| | |
|---|---|
| 1.தமிழ் | 2006-2007 வரை நேரடி நியமனம் பெற்றவர்களில் பணிவரன்முறை செய்யப்பட்டு, தகுதிகாண் பருவம் முடித்தவர்கள், 31.12.2007 வரை பதவி உயர்வு பெற்று பணிவரன்முறை செய்யப்பட்டவர்கள், 31.12.2007 வரை நியமனம் பெற்று பணிவரன்முறை செய்யப்பட்டவர்கள், 31.12.2007 வரை அலகுவிட்டு அலகு மாறுதல் பெற்றவர்கள் மற்றும் துறை மாறுதல் பெற்றவர்கள் |
| 2.ஆங்கிலம் | 2006-2007 வரை நேரடி நியமனம் பெற்றவர்களில் பணிவரன்முறை செய்யப்பட்டு, தகுதிகாண் பருவம் முடித்தவர்கள், 31.12.2007 வரை பதவி உயர்வு பெற்று பணிவரன்முறை செய்யப்பட்டவர்கள், 31.12.2007 வரை நியமனம் பெற்று பணிவரன்முறை செய்யப்பட்டு தகுதிகாண் பருவம் முடித்தவர்கள், 31.12.2007 வரை அலகுவிட்டு அலகுமாறுதல் பெற்றவர்கள் மற்றும் துறை மாறுதல் பெற்றவர்கள் |
| 3.கணிதம் | 2003-2004 ஆம் ஆண்டுவரை ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்டவர்கள் பதவி உயர்வு பெற்றவர்கள், கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டவர்கள் மற்றும் அலகுவிட்டு அலகு, துறை மாறுதல் மூலம் பணியில் சேர்ந்தவர்களில் பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் முடித்த பட்டதாரி ஆசிரியர்கள்/ஆசிரியர் பயிற்றுநர்கள்/பள்ளித் துணை ஆய்வர்கள் மற்றும் அதனையொத்த பணியிடங்களில் பணிபுரிபவர்கள் சார்பாக மட்டும் கருத்துருக்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும். |
| 4.இயற்பியல் | 2007-2008 ஆண்டுவரை ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்டவர்கள் பதவி உயர்வு பெற்றவர்கள், கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டவர்கள் மற்றும் அலகுவிட்டு அலகு, துறை மாறுதல் மூலம் பணியில் சேர்ந்தவர்களில் பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் முடித்த பட்டதாரி ஆசிரியர்கள்/ஆசிரியர் பயிற்றுநர்கள் சார்பாக மட்டும் கருத்துருக்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும். |
| 5.வேதியியல் | 2007-2008 ஆண்டுவரை ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்டவர்கள் பதவி உயர்வு பெற்றவர்கள், கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டவர்கள் மற்றும் அலகுவிட்டு அலகு, துறை மாறுதல் மூலம் பணியில் பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் முடித்த பட்டதாரி ஆசிரியர்கள்/ஆசிரியர் பயிற்றுநர்கள் சார்பாக மட்டும் கருத்துருக்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| 6.தாவரவியல் | 2009-2010ம் ஆண்டுவரை ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்டவர்கள் பதவி உயர்வு பெற்றவர்கள், கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டவர்கள் மற்றும் அலகுவிட்டு அலகு, துறை மாறுதல் மூலம் பணியில் பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் முடித்த பட்டதாரி ஆசிரியர்கள்/ஆசிரியர் பயிற்றுநர்கள் சார்பாக மட்டும் கருத்துருக்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும். |
| 7.விலங்கியல் | 2009-2010ம் ஆண்டுவரை ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்டவர்கள் பதவி உயர்வு பெற்றவர்கள், கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டவர்கள் மற்றும் அலகுவிட்டு அலகு, துறை மாறுதல் மூலம் பணியில் பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் முடித்த பட்டதாரி ஆசிரியர்கள்/ஆசிரியர் பயிற்றுநர்கள் சார்பாக மட்டும் கருத்துருக்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும். |
| 8. வரலாறு | 2007 - 2008 ஆம் ஆண்டு வரை ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்டவர்கள் பதவி உயர்வு பெற்றவர்கள், கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டவர்கள் மற்றும் அலகுவிட்டு அலகு, துறை மாறுதல் மூலம் பணியில் சேர்ந்தவர்களில் பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் முடித்த பட்டதாரி ஆசிரியர்கள்/ஆசிரியர் பயிற்றுநர்கள் பள்ளித்துணை ஆய்வாளர்கள் மற்றும் அதனையொத்த பணியிடங்களில் பணிபுரிபவர்கள் சார்பாக கருத்துருக்கள் மட்டும் அனுப்பி வைக்கப்பட வேண்டும். |
| 9 . பொருளியல் | 31.12.2021 ஆம் ஆண்டு வரை ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்டவர்கள் பதவி உயர்வு பெற்றவர்கள், கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டவர்கள் மற்றும் அலகுவிட்டு அலகு, துறை மாறுதல் மூலம் பணியில் சேர்ந்தவர்களில் பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் முடித்த பட்டதாரி ஆசிரியர்கள்/ஆசிரியர் பயிற்றுநர்கள் பள்ளித்துணை ஆய்வாளர்கள் மற்றும் அதனையொத்த பணியிடங்களில் பணிபுரிபவர்கள் சார்பாக |
| 10 . வணிகவியல் | 31.12.2021 ஆம் ஆண்டு வரை ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்டவர்கள் பதவி உயர்வு பெற்றவர்கள், கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டவர்கள் மற்றும் அலகுவிட்டு அலகு, துறை மாறுதல் மூலம் பணியில் சேர்ந்தவர்களில் பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் முடித்த பட்டதாரி ஆசிரியர்கள்/ஆசிரியர் பயிற்றுநர்கள்/ பள்ளித்துணை ஆய்வாளர்கள்/ தொழிற்கல்வி ஆசிரியர்கள் (Commerce and Business) மற்றும் அதனையொத்த பணியிடங்களில் பணிபுரிபவர்கள் சார்பாக கருத்துருக்கள் மட்டும் அனுப்பி வைக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| 11 . புவியியல் | 2006-2007 ஆம் ஆண்டு வரை ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்டவர்கள் பதவி உயர்வு பெற்றவர்கள், கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டவர்கள் மற்றும் அலகுவிட்டு அலகு, துறை மாறுதல் மூலம் பணியில் சேர்ந்தவர்களில் பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் முடித்த பட்டதாரி ஆசிரியர்கள்/ஆசிரியர் பயிற்றுநர்கள் பள்ளித்துணை ஆய்வாளர்கள் மற்றும் அதனையொத்த பணியிடங்களில் பணிபுரிபவர்கள் சார்பாக கருத்துருக்கள் மட்டும் அனுப்பி வைக்கப்பட வேண்டும். |
| 12.உடற்கல்வி இயக்குநர் நிலை – 1 | 31.12.2022 வரை பதவி உயர்வு பெற்றவர்கள், கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டவர்கள் மற்றும் அலகுவிட்டு அலகு, துறை மாறுதல் மூலம் பணியில் சேர்ந்தவர்களில் பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் முடித்த உடற்கல்வி இயக்குநர் நிலை – II சார்பாக மட்டும் கருத்துருக்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும் |

வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றி அனைத்து கல்விச் சான்றுகளின் உண்மைத்தன்மை, பட்டச் சான்றுகளின் நகல்களுடன் ஆண்டுவாரியாக மதிப்பெண் பட்டியல் நகலுடன் பணிக்கு சேர்ந்தபின் உயர்கல்வி பயின்று இருப்பின் முன் அனுமதி நகலுடன் அனைத்து பதிவுகள் மேற்கொண்ட பணிப்பதிவேட்டின் சான்றொப்ப நகலுடன் வரிசைக்கிரமமாக (இணைப்பு– படிவத்துடன் (Annexure–1) இணைக்க வேண்டிய ஆணைகள் விவரம்) இணைத்து 3 நகல்களில் **கீழ்கண்ட நாளில் மட்டும்**, இடத்தில் தனி நபர் மூலம் அசல் பணிப்பதிவேட்டுடன் கண்டிப்பாக **நேரில் சமர்ப்பிக்க** அரசு/ நகராட்சி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. மேற்காண் 14 பாடங்களில் சம்பந்தப்பட்ட பாடங்களுக்கு **தகுதிவாய்ந்த நபர்கள் எவருமில்லை எனில் பாடவாரியாக தனித்தனி A4 தாளில் இன்மை அறிக்கையினை கீழ்கானும் நாளிலேயே நேரில் அவசியம் சமர்ப்பிக்கப்பட்டு பதிவேட்டில் கையொப்பமிடவேண்டும்.**

| வ.எண். | சமர்ப்பிக்கப்பட வேண்டிய நாள் | காலை / மாலை | பாடம் | இடம் |
|---|---|---|---|---|
| 1. | 20.03.2023 | 10.00 மணிமுதல் 01.00 மணிவரை | தமிழ்,ஆங்கிலம், தாவரவியல் | முதன்மைக் கல்வி அலுவலகம், வேலூர்.09. |
| | | மாலை02.00 மணிமுதல் 05.00 மணிவரை | கணிதம், வரலாறு வணிகவியல் | |
| 2 | 21.03.2023 | 10.00 மணிமுதல் 01.00 மணிவரை | இயற்பியல், விலங்கியல், பொருளியல் | முதன்மைக் கல்வி அலுவலகம், வேலூர்.09. |
| | | மாலை02.00 மணிமுதல் 05.00 மணிவரை | வேதியியல், புவியியல், உடற்கல்வி இயக்குநர் நிலை–1. | |

அந்தந்த பாடங்களுக்கு ஒதுக்கப்பட்ட நாட்களில் கருத்துருக்களை நேரில் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர்.

16/03/23

இணைப்பு:

1) பார்வையில் பள்ளிக்கல்வி ஆணையரக இணை இயக்குநரின் (இணை இயக்குநர்) செயல்முறைக் கடிதங்கள் –14
2) படிவம் (Annexure–1)
3) வழிகாட்டுதல்கள்

பெறுநர்

1) கூடுதல் முதன்மைக்கல்வி அலுவலர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, காட்பாடி, வேலூர்
2) அனைத்து அரசு / நகராட்சி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள்.

## இணைப்பு

## (படிவத்துடன் ( Annexure-1) இணைக்க வேண்டிய ஆவண விவரங்கள்)

கீழ்கண்ட ஆவணங்கள், சான்றுகள், மதிப்பெண் சான்றுகள் மற்றும் பணிப்பதிவேட்டின் நகல்களை அதே வரிசைக்கிரமமாக வரிசைப்படுத்தி, படிவத்தில் ( Annexure-1) பணிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ள பக்க எண்களை குறித்து சமர்ப்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

1) பணிப்பதிவேட்டின் முதல் மற்றும் இரண்டாம் பக்க நகல்
2) முதன் முதலில் பட்டதாரி/ ஆசிரியர் பயிற்றுநர் / பள்ளித்துணை ஆய்வர் பணியில் சேர்ந்த ஆணை நகல் மற்றும் அதன் பதிவுகள் மேற்கண்ட பதிவு நகல்
3) முறையான நியமன ஆணை நகல், பணிப்பதிவேட்டிலும் பதிவுகள் மேற்கொண்ட நகல்
4) பட்டதாரி ஆசிரியர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்த ஆணை நகல், பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொண்ட நகல்
5) அலகுவிட்டு அலகு வந்தவராயின் அரசுப்பள்ளியில் ஈர்த்துக்கொள்ளப்பட்டதற்கான ஆணை நகல்– பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொண்ட நகல்
6) பத்தாம் வகுப்பு சான்று நகல், உண்மைத்தன்மை நகல் மற்றும் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொண்ட நகல்
7) 12ம் வகுப்பு சான்று நகல், உண்மைத்தன்மை நகல் மற்றும் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொண்ட நகல்
8) பணியில் சேர்ந்த பின் உயர் கல்வி பயின்றிருப்பின் முன் அனுமதி நகல் மற்றும் பணிப்பதிவேட்டில் பதியப்பட்ட நகல்
9) இளங்கலை பட்டம்/ தற்காலிக சான்று நகல், மதிப்பெண் சான்றுகளின் நகல், உண்மைத்தன்மை நகல் மற்றும் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொண்ட நகல்
10) முதுகலை பட்டம்/ தற்காலிக சான்று நகல், மதிப்பெண் சான்றுகளின் நகல், உண்மைத்தன்மை நகல் மற்றும் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொண்ட நகல்
11) கல்வியியல் பட்டம்/ தற்காலிக சான்று நகல், மதிப்பெண் சான்றுகளின் நகல், உண்மைத்தன்மை நகல் மற்றும் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொண்ட நகல்
12) வேறுமாநிலத்திலி பயின்றிருப்பின் மதிப்பீடு செய்யப்பட்டதற்கான ஆணை மற்றும் பணிப்பதிவேட்டில்பதிவுகள் மேற்கொண்டமைக்கான நகல்
13) தாய்மொழி தமிழ் இல்லையெனில் தமிழ்நாடு தேர்வாணைத்தால் நடத்தப்படும் மொழித்தேர்வு தேர்ச்சிபெற்றமைக்கான நகல் மற்றும் பணிப்பதிவேட்டில் பதியப்பட்ட பக்க நகல்
14) சார்ந்த ஆசிரியர் மீது கடந்த ஐந்து ஆண்டுகளில் தண்டனை வழங்கப்பட்டிருப்பின் அதன் விவரம், பணிப்பதிவேட்டில் பதிவுகள் பதிவுகள் மேற்கொண்ட பக்க நகல்
15) ஒழுங்கு நடவடிக்கை நிலுவையிலிருப்பின் அதன் விவரம்
16) கடந்த ஆண்டுகளில் தற்காலிகமாக/ நிரந்தரமாக பதவி உயர்வு துறப்பு செய்திருப்பின் அதன் விவரம் மற்றும் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொண்ட பக்க நகல்

மேற்காண் நகல்களில் சான்றொப்பமிட்டு படிவத்துடன் இதே வரிசையில் இணைத்து சமர்ப்பிக்கும்படி அரசு/நகராட்சி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர்.

16/03/23